

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## உத்தமர்களின் கண்ணீரை காணும் கர்த்தர்!

"என்னிடத்தில் ஒரு நன்மையும் வாசமாயில்லை!" (ரோமர் 7:18) என பவுல் கூறும் உத்தமத்தை நாத்தான்வேல் பெற்றிருந்தார்! "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ?" என கூறிய நாத்தான்வேலை "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்!" என இயேசு அகமகிழ்ந்தார்! (யோவான் 1:46,47).

நாத்தான்வேலோ 'நீர் என்னை எப்படி அறிவீர்?' என கேட்க, இயேசு பதிலாக, "தன் பிழை உணரும் உத்தமர்களை நான் அறிவேன்.... கேள் நாத்தான்வேலே, நீ உன் வீட்டின் பின்புறமுள்ள அத்திமரத்தின் கீழ் அமர்ந்து **என் வேண்டுதலின் கண்ணீரை கர்த்தர் காண்பாரோ? என ஜெபித்தாயே, அங்கே உன்னைக் கண்டேன்!**" எனக் கூறியதும், ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியில் "ரபீ, நீர் தேவனுடைய குமாரன் மாத்திரமல்ல, இஸ்ரவேலனாகிய எனக்கு இனிமுதல் நீர்தான் ராஜா!" என ஆர்ப்பரித்தான்! அதற்கு இயேசு "என்னை விசுவாசித்த நாத்தான்வேலே, இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்! துன்பத்தில், உன் எல்லா ஜெபத்திற்கும் பதில் அளிப்பேன்!" எனக்கூறி அகமகிழ்ந்தார்! (யோவான் 1:50,51). *-tr*



## 'கானாவூர் அற்புதம்' நம் வீட்டிலும் சபையிலும் நிகழ்வதாக!

உங்கள் வீடோ அல்லது கானாவூர் பொது இட கூடுகையோ "கொஞ்சம் கோபப்படாமல் இருக்ககூடாதா? ஏன் இந்த முறுமுறுப்பு? சாந்தம் இல்லையே!" என்றெல்லாம் நீங்கள் முறையிட்ட நபரிடமிருந்து ஓர் குரல் தொனிப்பதை 'இன்றாவது' உற்று கேளுங்கள்: "கொஞ்சம் என்னிடம் பொறுமையாய் இருங்கள்! என் வேளை இன்னமும் வரவில்லை! உங்களுக்கு ருசியில்லாத என் கோபத்தை, முறுமுறுப்பை, இயேசுவுக்கு முன்பாக ஊற்றிக் கொண்டுதான் இருக்கிறேன்..... ஆ, இப்போது பார்த்தீர்களா? சாந்தமும், அன்பும் பரத்திலிருந்து வந்து, எனது ருசியில்லா தண்ணீரை, மிகுந்த ருசியான திராட்ச ரசமாய் மாற்றிவிட்டதே!" (ரோமர் 5:5). 'இந்த வேளை வருவதற்கு, நீங்கள் பொறுமையாய் காத்திருந்ததற்கு நன்றி!' என்ற குரல் உங்கள் வீட்டிலும், கூடிவந்த நண்பர்கள், உறவினர்கள் மத்தியிலும் எதிரொலிப்பதை நீங்கள் நிச்சயமாய் கேட்பீர்கள்!

இவ்வாறாக "இயேசுவின் மகிமை வெளிப்படும்" அன்பின் ஆரவார மகிழ்ச்சி உங்கள் வீட்டிலும், நண்பர்கள் உறவினர்கள் மத்தியிலும் மாத்திரமல்ல, உங்கள் சபையிலும் தொனிப்பது சாத்தியமே என மனதார விசுவாசித்து வாழுங்கள்! (யோவான் 2:11) அல்லேலூயா.

*-Ed*

'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ. 150.00

M.O அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
**G-Pay** : MADURAI CHRISTIAN FELLOWSHIP A/c No: 502087685 IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell : 9843049935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## நாமாக அல்ல, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்!

ஒரு மனபாரத்தை முன்வைத்து நாம் தேவனிடம் ஜெபிக்கிறோம். ஜெபித்த பின்பு, அந்த ஜெபம் நிறைவேறி நாம் பதில் பெறுவதற்கு "என்னால் இயன்ற அனைத்தையும் செய்வது, என் கடமை" என்று எண்ணுகிறோம். ஆனால் அவரோ, தமது மேன்மையான வழியை நமக்கு கற்றுத் தந்துள்ளார். அது என்ன வெனில் "நாம் எடுக்கும் எந்த முயற்சியும், **தேவனுடைய கிரியைக்கு** இடையூறாய் வந்து நிற்கும்" என்றே நமக்குப் போதித்துள்ளார்.

இந்த உண்மையை அறிந்தபிறகுதான், "நான் ஜெபித்தவுடன், எனக்காக சகலத்தையும் தேவன் செய்து முடிப்பார்" என்ற பூரண நிச்சயத்தோடு அவரை விசுவாசித்திட முடிகிறது! மேலும் 'துதியின் ஆவியோடு' நாம் காத்திருந்து, **அவர் சொன்னதை மாத்திரமே நாம் செய்து** அவரது விருப்பத்தை நிறைவேற்றுகிறோம்!

நாம் எதுவுமே செய்யாமல் அமர்ந்திருப்பது நமக்கு பாதுகாப்பாய் தோன்றவில்லை என்றாலும், கர்த்தரையே நம்பியிருக்கும் உயர் ஸ்தலத்தை நாம் பற்றிக்கொள்ள முடிகிறது. ஆகிலும், நேரம் தாமதிக்க தாமதிக்க, 'பிரச்சனையை' நாமே கையில் எடுத்துப் போராட தூண்டும் சோதனை நமக்குள் மிக வலிமையாய் செயல்படுவதையும் காண்கிறோம்.

கர்த்தர் எனக்காக யுத்தம் செய்வார் எனவும், இரட்சிப்பு கர்த்தருடையது எனவும் விசுவாசித்து, 'நாம் சும்மா இருப்பது' எவ்வளவு கடினமாயிருக்கிறது என்றே திரளான தேவ மக்கள் எண்ணி, சோர்வு அடைகின்றனர்! ஆனால் "கர்த்தரை விசுவாசிக்கும்" யாவருக்கும் "சும்மா இருப்பது" அவர்களால் கூடும்! என்பதே நற்செய்தி!

*தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதன், தன்னை மீட்க வந்தவருக்கு உதவி செய்ய முயற்சிப்பது எவ்வளவு மதியீனமானது என்ற உண்மையை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். அதுபோலவே, நாங்களாகவே முயற்சித்து தப்பிக்கொள்வோம் என கூறுபவர்களுக்கு, கர்த்தர் உதவிக்கரம் நீட்டுவது கூடாதகாரியம்! ஆம், இதுபோன்ற சமயங்களில்*

*நமக்கு அவர் உதவி செய்ய மாட்டார் என்றல்ல.... **அவரால் உதவி செய்ய முடியாது** என்பதே உண்மையாகும்! நம்முடைய தலையீடு தேவனுடைய கிரியைக்கு இடையூறாய் இருக்கும் என்றே ஸ்பர்ஜன் அவர்கள் அடிக்கடி கூறுவார்! இந்த உலகத்தில் நமது போர்க்களம் முழு மூச்சாய் இருக்கும் நிலையில், ஆவிக்குரிய போர்க்களம் செயலற்றதாய் போய்விடும்!*

*நம் ஜெபத்திற்கு, தேவன் பதில் தந்திட அதிக நேரம் எடுத்துக்கொள்வது வழக்கம்! இவ்வித நிலையில், நம்மில் அநேகர், தேவன் கிரியை செய்வதற்கு நேரம் தந்திட தவறி விடுகிறோம். இப்படி சிந்தித்துப்பாருங்கள்: பல அடுக்குகள் கொண்ட ஒரு ரோஜா பூவை அழகுபட வர்ணம் பூசுவதற்கு தேவனுக்கு நேரம் வேண்டும்! மிக உயர்ந்த ஓக் மரத்தை வளரச் செய்திட தேவனுக்கு நேரம் வேண்டும்! ஒரு கோதுமை வயலிலிருந்து கோதுமையை விளையச் செய்திட தேவனுக்கு நேரம் வேண்டும்! அந்த கோதுமையை மெல்லிய மாவாக்கி, நமக்கு அப்பமாய் தருவதற்கு தேவனுக்கு நேரம் வேண்டும்! பசியுள்ள ஒருவனுக்கு, அவன் ஆவியின் ஏழ்மைப்படி 'ஜீவன் நிறைந்த அப்பம் தந்திட' தேவனுக்கு நேரம் வேண்டும்! இவையனைத்திற்கும் 'சிலகாலம்' நிறைவேற வேண்டும்!*

**ஆகவேதான், நாம் விதைத்து, பண்படுத்தி 'தேவ நோக்கம் அனைத்தும் நிறைவேறுவதற்கு' விசுவாசத்தோடு காத்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. 'காரியசித்தி நிறைவேறுவதற்காகவே' நாம் தேவனுக்கு நேரம் தந்து காத்திருக்கிறோம்!**

*அன்பான சகோதர சகோதரிகளே, நம் ஜெப ஜீவியத்தில் இவ்வித மாகவே தேவனுக்கு காத்திருக்கும் பழக்கத்தை கற்றுக் கொள்வோமாக. நாம் கர்த்தருக்கு காத்திருப்பது 'புதுபெலன்' தருமேயல்லாமல், நாம் ஒருக்காலும் வெட்கப்பட்டு போவதேயில்லை! நம் ஜெபத்திற்கு பதில் தந்திட, தேவனும் நேரம் எடுத்துக்கொள்கிறார் என்ற உண்மையை நன்கு அறிந்தவர்களாய், விசுவாசத்தோடு காத்திருப்போமாக!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## தூற்றுக்கூடை, கோதுமை மணி!

**யோ**வான் *ஸ்நானகன் கூறும்போது "தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர்* **தமது களத்தை** *நன்றாய் விளக்கி, தமது கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" என்றார் (மத்.3:12). கர்த்தர் தமது தாசன் மூலமாய் ஓர் போலியான களத்தை விளக்குவதற்கு அல்லது*

சுத்திகரிப்பதற்கு அனுப்பமாட்டார். கர்த்தரோ தனக்குச் சொந்தமான "தமது களத்தை" விளக்குவதற்கு அல்லது சுத்திகரிப்பதற்கே வருகிறார். **கர்த்தரே வந்து சுத்திகரிக்கும் சபையே பாக்கியமுள்ளது** என்றே நாம் கூற வேண்டும்!

பாருங்கள் "தூற்றுக்கூடை! கோதுமை மணி!" வேகமாய் வீசும் தூற்றுக்கூடையை வைத்தே கனமான கோதுமையின் மதிப்பு வெளிப்படுகிறது. கர்த்தர் வீசும் தூற்றுக்கூடையின் வேகமான காற்றில் 'கோதுமை மணி' மாத்திரமே இருந்த இடத்தில் நிலைத்திருக்கும். ஆனால், பதர்களோ காற்றில் சுழற்று பறந்து கோதுமையை விட்டு விலகி நிற்கும்!

**சபையில் உள்ள ஆத்துமாக்களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. ஆவிக்குரிய திறன்கொண்ட கோதுமை மணிகளும் சபையில் இருப்பார்கள், திறனற்ற பதர்களும் சபையில் இருப்பார்கள்!**

அவர்களின் திறனற்ற தன்மை, அவர்களின் அன்றாட ஜீவியத்திலே வெளியரங்கமாகிறது. அவர்களின் நடக்கையில் பரிசுத்தமற்ற மேலோட்டமே காணப்படுகிறது. இதற்கு நேர்-மாறாக, திறன்கொண்ட ஜனங்கள் இருக்கிறார்கள். இவர்களின் நடக்கையிலோ ஆழமான பரிசுத்தம் காணப்படுகிறது! திறனற்ற ஜனங்களின் வார்த்தையில் அசுசியும் வெறுமையும் காணப்படுகிறது! மாறாக, திறன்கொண்ட சகோதரர்களின் வார்த்தையில் அன்பும் ஐக்கியமும் கொண்ட பரிசுத்தத்தின் ஆழம் காணப்படுகிறது!

*யாதொரு பாரபட்சமும் இல்லாமல் 'யாரெல்லாம்' தேவனை அண்டி வாழ்கிறார்களோ, அவர்களின் கோதுமை மணிகளில் திறட்சி சுரக்கத் தொடங்கிவிடும்! இவ்வாறாகவே, இவர்கள் திறன்கொண்ட கோதுமை மணியாய் மாறுகிறார்கள். தன் ஆவியில் திறன்கொண்ட சகோதரர்களோடு பழகும்போது, திறனற்றவர்கள் தங்கள் கோதுமை மணியின் வெறுமையான பதரை சீக்கிரத்தில் வித்தியாசம் காண்பார்கள். நல்ல மணியாய் வாழும் சகோதரர்களிடம், பார்வையின் பரிசுத்தத்தில் திறன்! மாயமற்ற பேசும் வார்த்தையில் திறன்! உலகத்தோடு ஒத்து வாழாத நடக்கையில் திறன்! பண விஷய நேர்மையில் திறன்! ஆத்திரமில்லாத அன்பில் திறன்! இவ்வாறாக நல்ல கோதுமை மணியாய் விளங்குகிறார்கள்!*

கர்த்தர் காண்பிக்கும் வெளிச்சத்திற்கு உண்மையாய் வாழ்பவர்கள், தேவனுடைய திறன்கொண்ட மணிகளை சேர்க்கும் களஞ்சியத்திற்குள் வந்து சேர்வார்கள். நித்தியத்தின் பொக்கிஷங்கள் அல்லாமல்,

மண்ணுக்குரிய மேன்மையை சேர்த்து வைத்து வாழ்பவர்கள், **மனுஷர் பார்வையில்** 'கோதுமை மணிபோல்' மேன்மையாய் வாழ்ந்து மாயம் செய்யலாம்! இவர்கள் **தேவனுடைய பார்வைக்கு முன்பாக** வந்து நிற்கும் காலத்தில், அவர்களுடைய மாயம் நிலைத்து நிற்காது. அவர்கள் 'வெறும் பதர்கள்' என்பதை யாவரும் அறிந்து கொள்வார்கள். ஆவிக்குரிய பொக்கிஷம் நிறைந்த கோதுமை மணியாய், நம் யாவரையும் கர்த்தர் அவரது களஞ்சியத்தில் சேர்த்து வைத்திட தகுதியுள்ளவர்களாய் வாழ்ந்திடக்கடவோம்! இதோ கர்த்தர் வருகிறார், தூற்றுக்கூடையோடு வருகிறார் என்ற உணர்வோடு விழிப்புள்ள ஜீவியம் செய்திடக்கடவோம்!

- அக்ஸல் ஸ்மித்

---

## 'அவதூறுகளை சகித்திட கூறி' கர்த்தர் தேற்றினார்!

தந்தை லா - கோம்பே, மடத்திலிருந்து சென்றவுடன், எனக்கு அவர்கள் செய்த உபத்திரவம் இன்னும் அதிகமானது! ஆகிலும், ஜெனிவா பிஷப் என்னிடம் ஓரளவு மரியாதையுடன் நடந்து கொண்டார். அதேசமயம், என்னைக்குறித்து அவர் வைத்திருந்த திட்டத்தை தீதாய் நிறைவேற்றுகிறதற்கும் முயற்சித்தார். எனக்கு வரவேண்டிய கடிதங்களை தொடர்ந்து தடை செய்து, பிரான்ஸ் தலைமை மடத்திலுள்ள பல ஜனங்களுக்கு, **இன்னமும் என்னைக் குறித்த தப்பான அபிப்ராயங்களை இடைவிடாமல் பரப்பிக்கொண்டிருந்தார்.** எனக்கு வந்த கடிதங்களை நான் பெறமுடியாதபடி கண்காணித்து வந்த அதே வேளையில், அங்கிருந்த பிரசங்கிக்கும் அவர் குடும்பத்தாருக்கும் வந்த 22 கடிதங்கள் திறக்கப்பட்டு, தணிக்கை செய்யப்பட்டு அவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது! எனக்கு வந்த பல கடிதங்களில் "சட்ட ரீதியான அங்கீகார கையெழுத்து வேண்டி" ஓர் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதை மாத்திரம், ஒரு தனி கவரில் வைத்து என்னிடம் கொடுத்தார்கள்!

ஜெனிவா மடத்து பிஷப் அவர்கள், இரண்டு காரியத்தினிமித்தம் என்மீது கோபம் கொண்டிருந்தார்கள். **முதலாவதாக,** என்னுடைய ஓய்வு ஊதியத்தை (Pension) அவருடைய பெயரில் மாற்றித் தரும்படி கேட்டிருந்தார். முதலாவது அன்போடு கேட்டு, பின்பு பலமுறை ஆத்திரமாய் கேட்டுப்பார்த்தும் நான் அதற்கு இணங்கவில்லை. இரண்டாவதாக, ஒவ்வொரு காரியத்திற்கும் நான் அவரிடம் வந்து ஆலோசனை கேட்க எதிர்பார்த்தார்! அதற்கும் நான் மனப்பூர்வமாய் சம்மதிக்கவில்லை. இப்படியொரு அற்ப காரியங்களுக்காக, என்மீது விரோதம் காட்டினார்கள்! இதை முன்னிட்டு, பிஷப் அவர்களுக்கு

ஜெனிவா தந்தை லா- மோத்தே சிநேகிதராய் மாறினார்!

*பிஷப்புடன் கொண்ட சிநேகித அடிப்படையில்தான், ஜெனிவா தந்தை அவர்கள் பிரான்ஸ் முழுவதும் என்னைக் குறித்து அவதூறுகளை பரப்பினார். அதே சமயம், நான் அவர்களுக்கு கொடுத்திருந்த நன்கொடைகளை திருப்பி கேட்போனோ? எனவும் சந்தேகித்தார்கள். இவ்வாறு, நான் கொடுத்த நன்கொடைகளை திரும்பி பெறுவதற்கு, பிரான்ஸிலுள்ள என் நண்பர்களின் உதவியை நாடுவேன் என்றும் எண்ணியிருந்தார்கள். இப்படியொரு இழிவான பகுதிக்கு நான் செல்வதற்கு சிறிதளவு சிந்தையும் எனக்கு இருக்கவில்லை! நானோ, இயேசு கிறிஸ்துவுடன் இருந்த ஏழ்மையின் தாழ்மை ஜீவியத்தை பெற்றுக்கொள்ளவே வாஞ்சை கொண்டவளாயிருந்தேன்!*

ஜெனிவா தந்தை, எனக்கு எழுதிய சில கடிதங்கள், பிஷப் மூலம் என்னிடம் கொடுக்கப்பட்டது. அந்த அளவிற்கு அவர்கள் இருவரும் ஒரு மனமாய் இருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, எனக்கு அவர் எழுதிய கடிதங்களுக்கு 'அன்பும் மரியாதையுடன்' பதில் எழுதினேன். ஆனால், அதை அவரோ, அதை ஒரு பொருட்டாய் எண்ணாமல், அதிக எரிச்சலையே என்மீது காட்டினார்கள்!

இம்முறை, பாரீஸிலுள்ள அநேக நன் - சிஸ்டர்களுக்கும், முக்கியமான பொறுப்பிலுள்ளவர்களுக்கும், எனக்கு அன்புடன் கடிதம் எழுதிய சிநேகிதர்களுக்கும் "என்னைக் குறித்து எவ்வளவு தீமை எழுத முடியுமோ அத்தனையும் எழுதி" தொடர்ந்து, கசப்பை கொட்டினார்கள்.

**அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் "சகலத்தையும் கர்த்தருக்கு ஒப்புவித்து ஊழியம் செய்யும் ஒரு நபருக்கு" அவர்கள் செய்யும் தீமையை, மற்றவர்கள் கண்களுக்கு மறைப்பதற்கே அவ்வாறு செய்தார்கள்!**

அதன் முடிவான நோக்கம் என்னவென்றால், என்னை குறித்த அவதூறுகளை நிலைப்படுத்தி, நான் இனிமேல் பிரான்சுக்கு செல்ல முடியாதபடி வாசல் அடைப்பதற்கே இத்தனை தீமையான முயற்சிகளைச் செய்தார்கள்! எதுவெல்லாம் பொய் அவதூறுகளோ அவை அனைத்தையும் என்மீது சுமத்தினார்கள்! பிரான்ஸிலுள்ள எனது இனிய நண்பர்களுக்கு 'உண்மையை' நான் எப்படி விளக்குவது என தெரியாமல் தத்தளித்தேன். இத்தருணத்தில் ஆண்டவர் என்னை ஆட்கொண்டு "**சகல துன்பங்களையும் சகிப்பதற்குரிய மனநிலையை தந்து**" யாதொன்றைக் குறித்து நியாயப்படுத்தாபடி இருந்துவிட

*கூறினார்! இவ்வாறாக, என்னுடைய விஷயத்தில் "நியாயம் ஏதும் இல்லாமல், குற்றம் சாட்டும் தொனியே எங்கும் நிலைத்திருந்தது!" என் நேசருக்கே மகிமை உண்டாவதாக!*

*- மேடம் குயான்*

---

## சத்தியத்தின்படி வாழும் சபைக்கு, உபத்திரவம் உண்டு!

*நீங்கள் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் எனக் கூறும், யாக்கோபு* ***1:22****-ம் வசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய எச்சரிப்பு என்னவென்றால் "***உங்களை நீங்களே வஞ்சியாதபடிக்கு....***" என்ற எச்சரிப்பேயாகும். உபதேசங்களை கற்றுக்கொள்வதற்காகவே போதிக்கப்படும் வேதாகமம் 'அர்த்தமற்ற செயல்' என்றே கூற வேண்டும்! சத்தியம், ஜீவியத்தை புறக்கணித்து விட்டால்* **(Truth divorced from Life)....** *வேத உணர்வின்படி, அது சத்தியமேயல்ல!*

*வேதாகம போதகத்தின் சத்தியங்களுக்கு ஒருவன் 'கீழ்படியும் வரை' அதில் யாதொரு பிரயோஜனமும் இல்லை. வேதாகமத்தின் எல்லா உபதேசங்களுக்கும் பின்னால், ஜீவிய சக்கரம் உயிரோட்டமாய் சுழன்று கொண்டிருக்க வேண்டும்! இதை, நாம் யாவரும் அறிந்து கொள்வோமாக!*

*ஒருவனுக்கு ஓரளவு பிரசங்கிக்கும் திறன் இருந்தால் கூட, தன் பிரசங்க திறனால், ஒரு சிறு கூட்டத்தை கூட்டிவிட முடியும். மேலும், பல்வேறு கவர்ச்சியான உபதேசங்களைப் பிரசங்கித்து விட்டு..... ஜனங்களின் தவறுகளை சுட்டிக்காட்டாமலும், சரிசெய்ய வேண்டிய பகுதிகளைச் சொல்லாமலும் இருந்துவிட்டால், அந்த சபையில் இருக்கும் மக்கள் உள்ளம் மகிழ்ந்து, அந்த சபையில் திருப்தியாய் நீடித்த நாட்களாயும் அமர்ந்திருப்பார்கள்!*

*இதற்கு பதிலாக, சத்தியத்தைப் பேசும் ஒரு பிரசங்கி, அதை கேட்பவர்களின் ஜீவியத்தோடு உணர்த்திப் பேசத் தொடங்கி விட்டால்.... அந்த உத்தம பிரசங்கிக்கு 'கடின வாழ்வே' பாதையாக அமையும்! ஆனால், பரத்தின் மகிமையோ வெகு பிரகாசமாயிருக்கும். இதுபோன்ற தேவ மனிதர்களே, பின்தங்கிச் செல்லும் இன்றைய சபைக்கு அவசரமாய் தேவைப்படுகிறார்கள்!*

*இதைக்குறித்து பவுல் கூறும்பொழுது "உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு, நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய*

*சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம்" என 1தெசலோனிக்கேயர் 2:2 வசனத்தில் கூறினார். நாம் எவ்வளவு பெலவீனமாயிருக்கிறோமோ, அதைவிட தேவன் அவ்வளவு பெலன் கொண்டவர்! என நினைவுகூர்வது நம் யாவருக்கும் நல்லது. இந்த சத்தியத்தை, நானும் பவுலைப்போலவே "தேவனுக்குள் தைரியப்படுத்திக் கொண்டேன்!"*

**ஆகிலும், தேவனோடு பேசுவதற்கு பழகியவன் மாத்திரமே இவ்வித தைரியம் பெற்றிட முடியும்! நான் மனுஷரோடு பேசுவதை விட தேவனோடு அதிகம் பேசுவதை பழக்கமாக்கிக் கொண்டேன். நீண்ட கான்பரன்ஸில் கலந்துரை செய்வதை விட, தேவனோடு அதிகமாய் போராடி கலந்துரை செய்கிறேன்!**

*அதுபோன்ற சமயத்தில்தான், நான் ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே, நான் செய்ய வேண்டுமென்று அறிந்த 'இதை' நான் செய்வேனென்றால்..... நான் பேசவேண்டுமென்று உணர்ந்த 'ஒன்றை' நான் பேசுவேனென்றால்..... என் கர்த்தாவே, ஜனங்களிடமிருந்தும், சபையாய் இருக்கிற குழுக்களிடமிருந்தும் எனக்குத் தொந்தரவு வரும் என்பதை நான் அறிந்திருக்கிறேன்!" என தேவனோடு பேசினேன். இக்கட்டான இந்த வேளையில், நான் மனக்கிலேசமடைந்து தொடர்ந்து ஆண்டவரிடம் பேசத் தொடங்கினேன். "ஆண்டவரே, நான் மீண்டும் உம்மிடம் இது குறித்து பேசுகிறதற்காய் வருந்துகிறேன்! என் விசுவாசத்திற்கு நான் நேர்மையான உறுதி கொண்டு நிற்கும்போது, ஏராளமான துன்பங்கள் எனக்கு வரும் என்பது மாத்திரமல்லாமல்..... இந்த சூழ்நிலையில், பிசாசும் என் மீது விரோதம் கொள்வான்! எனவும் கலக்கமடைகிறேன்" இவ்வாறு நான் மீண்டும் மீண்டும் தேவனிடத்தில் மறுவி, பேசிய பின்பு, என் உள்ளத்தில் ஓர் திடமான உறுதி ஏற்பட்டது! இப்போது, என் தளர்ந்த கால்களை நிமிர்த்தி வைத்து நின்றேன்! ஆண்டவரை நோக்கிப் பார்த்து..... சர்வ வல்ல ஆண்டவரே, என் கண்களுக்கு முன்பாக தெளிவாய் தோன்றும் இந்த சத்தியத்திற்கு அடிபணிந்து, விளைவுகளைச் சந்திக்க ஆயத்தமாகி விட்டேன். என்னவெல்லாம் நடக்குமோ? என்ற யூகம் எனக்கு ஏற்பட்டாலும், அதைப் புறக்கணித்து, முன்னேறிச் செல்ல அடிபணிகிறேன்...... நான் அஞ்சி ஓடேன்! என்னை ஒளித்துக் கொள்ளவும் மாட்டேன்! ஒரு கோழையாய் ஒரு போர்வைக்குள் மடங்கி சுருண்டிட மாட்டேன். துணிவுடன் எழுந்து, 'போருக்கு' அர்ப்பணிக்கிறேன். ஏனெனில், நான் உம்மோடு சேர்ந்து நிற்கிறேன் என்பதை தெளிவாக அறிந்து*

*கொண்டேன். ஆம், எனது பெலகீனமான இந்த நேரத்தில்தான் "நான் பெலன் கொண்டிருப்பதை" மனதார உணருகிறேன்!!" என கூறினேன்.*

*இவ்வாறு நம் முழு ஜீவியத்தையும் தேவனுக்கு அர்ப்பணித்து* **வாழும் போதும்,** *உள்ளம் உடைந்து தேவனோடு* **பேசும் போதும்....** *சத்தியம் நமக்குள் ஆழமாய் வேர் கொள்கிறது!*

*இவ்வாறாகவே, தேவனிடத்தில் சொல்லிமுடியா அன்பு கொண்டு வாழும் ஒவ்வொரு* **சபைக்கும்,** *ஆண்டவர் துணிவான அழைப்பை தயக்கமின்றி தருகிறார்.... "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்!..... அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக் கொள்வேன்" என்றே கர்த்தர் சொல்லுகிறார்!! (2கொரி6:17).* *இவ்வித நேரடி அழைப்பை நெஞ்சார கேட்ட சபைகள் மாத்திரமே, தாங்கள் வாழும் இந்த கொடிய உலகிற்கு சமரசம் மறுத்து வாழ்வதினிமித்தம் ஏற்படும் வலிமையான அனுபவங்களை சபையில் கண்டு மகிழ்வார்கள்!*

> **ஒரு தூய சபை, உலகத்திற்கு ஒத்த வேஷம் மறுத்து எவ்வளவு முரணாக எழுந்து நிற்கிறதோ, அதைக் கொண்டே அந்த சபையின் வலிமையை கணக்கிட முடியும்!**

*இவ்வாறு 'சத்தியத்தின் உறுதிக்கு' துயரம் ஏற்படும் என்ற போதகம் வேதத்தில் மிகத் தெளிவாகவே இருக்கிறது! சபை சரித்திரத்திலும் திருஷ்டாந்தமாய் இருக்கிறது! ஆனால், அந்த சரித்திரத்தின் திருஷ்டாந்தத்தைப் பின்தொடர்ந்து வரும் உத்தம சபைகளைத்தான் இன்று காண அரிதாய் இருக்கிறது! ஏனெனில், எவ்வளவு முடியுமோ, அந்த அளவிற்கு இன்றைய சபைகள் சத்தியத்திற்கு முரணாக உலகத்தோடு இசைந்து போவதுதான் கொடுமையிலும் கொடுமையாயிருக்கிறது! இவ்வித சபைகள், எப்போதாவது உலகத்தைக் குறித்துப் பேச முற்பட்டால், "ரொம்ப மோசமான பாவங்களுக்கு நாம் விலகி நிற்க வேண்டியதுதான்! 'முழு அளவில்' நாம் உலகமாய் மாறிவிடக் கூடாதுதான்...." என்றெல்லாம் மழுப்பி பேச துவங்கி விட்டார்கள்!*

*சபை மாந்தரே கேளுங்கள்: "நம் சபைகளை சீயோன் பர்வதத்தில் கட்டுவோமாக! இந்த உலகத்தை துணிவுடன் ஏறிட்டு நின்று 'உலகமே! நாங்கள் நிற்கும் பர்வதம் ஏறி வாருங்கள்!' என்றே அழைப்பு கொடுப்போமாக! இதற்கு மாறாக 'எவ்வித கொடிய சூழ்நிலையிலும்' உலகத்திற்குள் நாம் இறங்கிவிடாதிருப்போமாக! நம் கிறிஸ்தவத்தின் சிங்காரமே சிலுவைதான்:*

**அந்த சிலுவையின் முழக்கமோ, மரித்து வாழுங்கள்! பிரிந்து வாழுங்கள்! ஒருபோதும், ஒருபோதும் ஒத்த வேஷத்திற்கு சமரசம் சேராதிருங்கள்! என்ற முழக்கமேயாகும். சிலுவையைக் கண்டடைந்தவர்களில் ஒருவர் கூட, ஒத்த வேஷத்திற்கு தாழ்ந்தது இல்லை!!**

*மெய்யான சிலுவை, ஜீவனுக்கும் மரணத்திற்கும் உறுதியான பிளவை ஏற்படுத்தும். இதை காணும், பயந்து வாழும் கோழைகள் "இது அதிக பட்சம்!" என்றே கூக்குரலிடுகிறார்கள். கோழைகளின் இந்த கூக்குரல், மெய்யாகவே சரிதான். ஏனெனில், இந்த பாருலகில் சிலுவை மாத்திரமே அதிகபட்சத்தின் உச்சக்கட்டம்! இதைத்தவிர வேறொன்றல்ல, சிலுவையே முடிவானது!*

*கிறிஸ்துவின் இந்த மெய்யான சிலுவையின் உபதேச அழைப்பு, மரணத்திலிருந்து ஜீவனுக்கும்! சீரழியும் பாவத்திலிருந்து நீதிக்கும்! வஞ்சக சாத்தானிடமிருந்து தேவனுக்கும்! பிரிந்து வாழும்படி அழைத்திடும் அழைப்பாகவே, அன்றும்... இன்றும் நிலைத்திருக்கிறது!! ஆமென்.*

*- A.W.டோசர்*

---

## 'நீதிமான்' என்று எண்ணி, பிறரை புறக்கணிப்பது தவறு!

*ஆண்டவரைப் 'பாவிகளின் சிநேகிதன்' என்று பரிசேயர் சொன்னதற்கு* **மூன்று சந்தர்ப்பங்களில்** *அவர்கள் கண்ட காரியங்கள் காரணமாயிருந்தன.*

**முதலாவது சந்தர்ப்பம் (லூக்கா 7:34,50):**

*சீமோன் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயன் அவரைத் தன்னோடு போஜனம்பண்ணும்படி அழைத்தான். ஆனால் அவனோ, அவரை இன்னாரென்று அறிந்து அவர்மீதுள்ள அன்பினால் அழைத்தவனல்ல என்பது நிச்சயம். சாதாரணமாக, விருந்தினருக்குச் செய்யவேண்டிய மரியாதைகளை அவன் கவனிக்கவில்லை. அவர் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. அவரை முத்தஞ்செய்யவில்லை. அவர் தலைக்கு எண்ணை பூசவில்லை!*

*ஆனால், அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு ஸ்திரீ உள்ளே வந்தாள். அவளோ, சீமோன் பார்வையில் படுபாவி! அந்தப் பட்டணமே அறிந்த பாவி! அவள் பாவ ஜீவியத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துப் பாழானவள்! கெட்ட பாவியாகிய அவள், அவர் பாதங்களைப் பிடித்துத் தன் கண்ணீரால் அவர் பாதங்களை நனைத்து, தன் அழகிய கூந்தலால் துடைத்து, அவர் பாதங்களை*

*ஓயாமல் முத்தமிட்டு, தான் கொண்டுவந்திருந்த விலை உயர்ந்த பரிமள தைலத்தைப் பூசினாள்!* **இவர், பாவியான ஸ்திரீக்கு இவ்வளவு இடங்கொடுத்தபடியால், இவரும் பாவியாகத்தான் இருக்கவேண்டும்** *என்பது அவனுடைய தீர்மானம்!*

**<u>இரண்டாவது சந்தர்ப்பம் (லூக்கா 14):</u>**

*ஒரு ஓய்வுநாளிலே பரிசேயருக்குத் தலைவனான ஒருவன் வீட்டிலே அவர் போஜனம்பண்ணும்படி போயிருந்தார். ஆண்டவரை விருந்துக்கு அழைத்த இந்த மனுஷன், பரிசேயருக்குள் விசேஷித்தவன். இதற்குள்ளாக,* **சகல ஆயக்காரரும் பாவிகளும்** *அவருடையவசனத்தைக் கேட்கும்படி ஆவலோடு அவரிடத்தில் கூடிவந்தார்கள் (லூக்கா 15). இவ்வாறு அவர்கள் அவரிடம் வந்தபோது, ஆண்டவர் அவர்களைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்! அவர்களோடு ஒன்றாயிருந்து சாப்பிட்டார்! இதைக் கண்ட பரிசேயர் ஆச்சரியப்பட்டு, இவருடைய மேலான உபதேசத்தைக் கேட்டோமே, இவரைத் தீர்க்கதரிசியாகவும் எண்ணினோமே,* **இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறாரே** *என்று முறுமுறுத்தார்கள்!*

**<u>மூன்றாவது சந்தர்ப்பம் (லூக்கா 19):</u>**

*ஆண்டவர் எரிகோவில் பிரவேசித்து, அதன் வழியாக நடந்துபோகையில், ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானு மாயிருந்த சகேயு என்ற மனுஷன் அவரைக்குறித்துக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க ஆசைகொண்டான். சகேயு குள்ளனாயிருந்தபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல் முன்னாக ஓடி, ஒரு காட்டத்தி மரத்தில் பிரயாசத்துடன் ஏறினான்!*

*ஆண்டவர், மரத்தின் அடியில் நின்று "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்" என்றார். சகேயுவுக்கு உண்டான ஆச்சரியமும் சந்தோஷமும் கொஞ்சமல்ல! அவன் சீக்கிரமாய் இறங்கி, அவரைத் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான். இதைக் கண்ட சத்துருக்கள்* "**இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார்**" *என்று முறுமுறுத்தார்கள். அவர்கள் சாட்டின குற்றம் அவர்களுக்கு நியாயமாகவேயிருந்தது. ஏனெனில், இந்த சகேயு தன் வரிவசூலில் அனேகரை வஞ்சித்து, அவர்கள் பணத்தை பெற்றிருந்தான்! அவர்கள் பொய்யாகவல்ல, தங்கள் கண்களால் கண்டபடியே அவரைக் குற்றப்படுத்தினார்கள்!*

*ஒரு பாவி தம்மைத் தொட இடங்கொடுத்தவர், கறைபடாதிருப்பது எப்படி? என்பது பரிசேயருடைய எண்ணம். அவர் குஷ்டரோகத்தைத்*

*தொட்டு "தீட்டுப்படாமலே" குஷ்டரோகத்தை சுகப்படுத்த வல்லவர் என்பதை அவர்கள் அறியவில்லை! அவர் சமூகத்தில் பாவம் பறந்து போனதேயன்றி, அவர் பாவியானதில்லை! அவர் பரிசுத்தம், பாவத்தை மேற்கொண்டதேயல்லாமல் பாவம் அவரை மேற்கொண்டதில்லை! அவரைத் தொட்ட தோஷிகள் சுத்தராக மாற்றப்பட்டார்களேயன்றி, அவர் தோஷியாகவில்லை!*

**வாஸ்தவத்தில் நடந்ததென்ன? பாவிகளை ஏற்றுக்கொண்டதால், அவர்கள் பாவத்தால் அவர் இழுப்புண்டாரோ? அல்லது, அவர் அவர்களை இழுத்துக்கொண்டாரோ? பாவம் பரிசுத்தத்தை மேற்கொண்டதோ? அல்லது, பரிசுத்தம் பாவத்தை மேற்கொண்டதோ? இதை விசாரிக்காமல் தீர்ப்புசெய்வது பிசகு! தோற்றத்தின்படி தீர்ப்புரைப்பது மோசமல்லவா!**

*விழுந்தோர், அவரைப் பிடித்து எழுந்து நின்றார்களேயன்றி, அவர் விழுந்துபோகவில்லை! இந்த இரகசியம் பரிசேயருக்குத் தெரியாது. இவரே, பரிசுத்த புருஷன்! நீதிமானாயிருந்தும், பிறரை புறக்கணிக்காத பரிசுத்தர்! அல்லேலூயா.*

*- பரமானந்தம் ஐயர்*

---

## 'கர்த்தருடைய நாளை' கர்த்தருக்கே செலவிட வேண்டும்!

*கர்த்தருடைய நாள் (The Lord's Day) என்பதற்கும், கர்த்தர் வரப்போகும் நாள் (The Day of the Lord) என்பதற்கும் வித்தியாசம் உண்டு. கர்த்தர் திரும்ப வரப்போகும் இரண்டாம் வருகையின் நாளை The Day of the Lord என வேதம் குறிப்பிடுகிறது (1தெச.5:2, 2பேதுரு.3:10). ஆனால், இயேசு உயிர்த்தெழுந்த வாரத்தின் முதலாம் நாளை The Lord's Day என வேதம் குறிப்பிடுகிறது (1கொரி.16:2, அப்.20:7). பழைய ஏற்பாட்டில், வாரத்தின் கடைசி நாளாகிய சனிக்கிழமை ஓய்வுநாளாக (Sabbath) அனுசரிக்கப்பட்டது. ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு உயிர்த்தெழுந்த வாரத்தின் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமை 'கர்த்தருடைய நாளாக' அறியப்பட்டு கிறிஸ்துவுடையவர்கள் சபையாக கூடி வந்தார்கள் என்பதை வேதப்பூர்வமாக அறிகிறோம்.*

*வாரத்தின் முதல் நாள், கர்த்தருடைய நாள்! இந்த நாளின் முக்கியத்துவத்தை நம் சபையிலுள்ள ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். வாரத்தின் ஒரு நாளை கர்த்தர் பிரித்தெடுத்து, அதை 'கர்த்தருடைய நாள்' (The Lord's Day) என மகிழ்வுடன் பெயரிட்டார். இயேசுவை பின்பற்றும் சீஷர்கள் அனைவரும் கர்த்தருடைய நாளைக் குறித்த முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள்! இதற்கு நேர்மாறாக*

*“இந்த நாளில் பயணம் செய்யலாமா? அல்லது கடைக்குச் சென்று பொருட்கள் வாங்கலாமா?” என கேட்டால், நான் உங்களுக்குச் சொல்லும் விடை “அது, எனக்குத் தெரியாது!” என்பதுதான். ஆனால் ஒன்று நான் அறிவேன், அது என்னவென்றால் “இந்த நாள் கர்த்தருடைய நாள், அது அவருக்குச் சொந்தமான நாள்!” இதுதான் என்னுடைய விடை. ஆகவே நான் உங்களுக்கு விளக்கிக்கூற விரும்புவதெல்லாம் “இந்நாளில் ஆண்டவர் எதையெல்லாம் செய்கிறாரோ, அதை நீங்கள் செய்திட முடியும்! அதுபோலவே அவர் எதையெல்லாம் செய்திட மாட்டாரோ, அதை நீங்கள் செய்திட கூடாது!” என்பதுதான்.*

*என் ஜீவிய காலம் முழுவதும், ‘கர்த்தருடைய நாளை’ விசேஷித்த நாளாய் நான் பிரித்து வைத்தே வாழ விரும்புகிறேன்.*

*சங்கீதம்.90:10 கூறுகிறபடி, நான் 70 வருடங்கள் வாழ்ந்தால், என் சிரம் தாழ்த்தி, என் கர்த்தாவிடம் “ஓ தேவனே, என் ஜீவிய 70 - வருட எல்லையை வைத்து, என் முழு 10 வருடங்களும் உமக்கே அர்ப்பணம்” என சமர்ப்பிப்பேன்! இது வேதப்பூர்வமான, துல்லியமான அர்ப்பணம் என்றே கூறுவேன்.*

*வாரத்தின் ஒவ்வொரு முதலாம் நாளையும், நான் நிச்சயமாய் கர்த்தருக்கென்றே கொடுத்து விடுவேன். ஏனெனில், அந்த நாள் என்னுடைய நாளல்ல.... அது, கர்த்தருடைய நாள்!*

> **கர்த்தருடைய நாளின் ஒவ்வொரு மணி நேரமும் எனக்குச் சொந்தமானதல்ல, அது கர்த்தருக்கே சொந்தம்.... நான் சிறிது நேரம் ஓய்வுஎடுத்தால், அது கர்த்தருக்காகவே ஓய்வெடுக்கிறேன்! நான் ஒரு வேலையில் ஈடுபட்டால், அந்த வேலையை கர்த்தருக்காகவே செய்கிறேன்! ஆகவே நான் யாதொன்றை செய்தாலும் அல்லது நான் யாதொன்றை செய்யாதிருந்தாலும், அவை அனைத்தும் கர்த்தருக்கே உரியதாகும்.**

*பக்தி உணர்வுடன் கூடிய இந்த கர்த்தருடைய நாளில் ‘ஓய்வுநாள் ஆசரிப்பு’ என்ற வாசனை, துளிகூட இருப்பதில்லை! ஏனெனில், ‘ஓய்வுநாள் மீறுதலுக்குரிய தண்டனை’ யாதொன்றும் இங்கு சொல்லப்படவில்லை. ஆம்,* **நானாகவே மனமுவந்து** *‘முழுவதுமாய் அந்த நாளை’ கர்த்தருக்கென்று படைக்கிறேன்! இந்த படைப்பு “வாரத்தின் 7- நாளும் கர்த்தருக்காகவே வாழுகிறேன்! என இந்த ‘புதிய உடன்படிக்கையில்’ நான் ஜீவிப்பதைவிட, மேலோன விசேஷித்த நாள்” என்றே உங்களுக்கு உணர்த்துகிறேன்!*

*இதை அப்போஸ்தலனாகிய யோவான் “கர்த்தருடைய நாளில், நான் ஆவிக்குள்ளானேன்!” என எழுதியுள்ளார் (வெளி.1:10). இவ்வாறு*

*கர்த்தருடைய நாளை மதித்து ஜீவித்தவர்கள் 'அந்நாளில், நான் ஆவிக்குள்ளானேன்!' என யோவான் அப்போஸ்தலன் கூறியதைப் போலவே சாட்சி பகிர்ந்திட முடியும்.*

**விசேஷமாய், கர்த்தருடைய நாளில் பரிசுத்தாவியானவர் சபையில் அபரிதமாய் எழுந்தருளி ஆசீர்வதிப்பார். அந்த ஆசீர்வாதம், நம் குடும்பத்தார் அனைவருக்கும் உரித்தாக வேண்டும்! அப்போது "நான் கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்" என நீங்கள் கூறுவது, உங்களுக்கும் நீங்கள் கூடிவரும் சபைக்கும் நலம் உண்டாகும்!**

*பல வருடங்களாய் சபையில் இருப்பவர்களைக் கண்டு, புதிய இளம் விசுவாசிகளும் "கர்த்தாவே, இது உம்முடைய நாள்" என தங்களை இடறல் இல்லாமல் அர்ப்பணித்திட முன்வர வேண்டும்!*

*மெய்யாகவே நான் கண்ட உண்மையை கூறுகிறேன்: யாரெல்லாம் தங்கள் வாலிப பிராயத்திலிருந்தே, இந்த நாளை "கர்த்தருடைய நாள்" என அர்ப்பணிக்கிறார்களோ, அதுபோன்றவர்கள் கூடிவரும் ஒரு சபைக்கு 'மிகப்பெரிய ஆசீர்வாதத்தை' கர்த்தர் கட்டளையிடுவார்!*

*- வாட்ச்மென் நீ*

---

## ஜெபத்தில் 'முழங்கால் படியிடும்' தாழ்மை வேண்டும்!

*ஜெபத்தில் எளிமையும் தாழ்மையுமான ஆவியுடையவர்களாய் நம்மை காத்துக்கொள்வதற்கு* "**முழங்காலிட்டு ஜெபிப்பது**" *வேதம் கற்றுத்தரும் ஓர் சிறந்த வழியாகும். சபைகளில் பெஞ்சுகளும், நாற்காலிகளும் போடத் துவங்கியவுடன் 'முழங்காலிடும் எளிமை' கிட்டத்தட்ட இல்லாமலே போய்விட்டது. முழங்காலிட்டு ஜெபிப்பது நம் நாட்டு கலாச்சாரமோ, மேற்கத்திய நாட்டு கலாச்சாரமோ, என எண்ணாதீர்கள். அது வேதாகமத்தின் கலாச்சாரம்! பயபக்திக்கு ஊன்றுகோலான முழங்கால் படியிடும் பழக்கத்தை வேதத்தில் பல இடங்களில் காண்கிறோமல்லவா!*

*கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக, சாலொமோன் "இஸ்ரவேலின்* **சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்கால்படியிட்டு** *தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து ஜெபித்தான்" (2நாளா.6:13). எஸ்றா மனபாரத்தோடு கூறும்போது "அந்திபலி நேரத்திலே நான்* **துக்கத்தோடு எழுந்து முழங்கால்படியிட்டு** *கர்த்தருக்கு நேராக கரங்களை விரித்து ஜெபித்தேன்" (எஸ்றா 9:5) என கூறினார். ஜெபத்திற்கு விரோதமாய் ராஜ கட்டளை பிறப்பிக்கப்பட்ட பிறகும் "தானியேல் தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல்அறையிலே எருசலேமுக்கு எதிராக*

பலகணிகள் திறந்திருக்க, அங்கே, தான் முன் செய்து வந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் **தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு** ஜெபம் பண்ணினார்'' என வாசிக்கிறோம் (தானி.6:10). தானியேல் ஒருவேளை 'முழங்கால்படியிடாமல் ஜெபித்திருந்தால்' அவருடைய எதிரிகள் தானியேல் ஜெபிக்கிறான் என்பதை கண்டுபிடித்திருக்க முடியாது! அதைப்பற்றியெல்லாம் தானியேல் கவலைப்படாமல் 'ஆரம்பத்திலிருந்து அவன் செய்து வந்தபடியே' முழங்கால்படியிட்டு ஜெபித்தான்.

**இயேசுவும், பூர்வ காலத்து நிலையிலிருந்து மாறாமல் ''அவர்களை விட்டு கல்லெறி தூரம் அப்புறம் போய் முழங்கால்படியிட்டு'' ஜெபித்தார்! (லூக்கா 22:41).**

கிறிஸ்துவின் சாட்சிக்காக ஸ்தேவான் கல்லெறியப்பட்டபோது ''**அவனோ, முழங்கால்படியிட்டு:** ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும் என மிகுந்த சத்தமிட்டு சொன்னார்'' எனவும் வாசிக்கிறோம் (அப்.7:60). இயேசுவைப் பின்பற்றிய சீஷர்களும் இவ்வாறாகவே அவரைப் பின்பற்றி ''பேதுரு எல்லோரையும் வெளியே போகச் செய்து **முழங்கால்படியிட்டு** ஜெபம் பண்ணினார்'' எனவும் வாசிக்கிறோம் (அப்.9:40). சீஷர்களுக்கு அடுத்து, பரிசுத்தவானாய் திகழ்ந்த **பவுல் ''முழங்கால்படியிட்டு** அவர்கள் எல்லோரோடும் கூட ஜெபம் பண்ணினார்'' என வாசிக்கிறோம் (அப்.20:36).

**பார்த்தீர்களா, ஓர் ஞானவானாகிய செல்வம் நிறைந்த அரசன் முழங்கால்படியிட்டு ஜெபித்தான்! வேதசாஸ்திர ஞானி முழங்கால் படியிட்டார்! ஒரு தீர்க்கதரிசியும் முழங்கால்படியிட்டார்! நம் ராஜாதி ராஜா முழங்கால்படியிட்டார்! உதவிக்கார ஊழியன் முழங்கால்படியிட்டான்! அப்போஸ்தலர்கள் முழங்கால் படியிட்டார்கள்!**

இன்று, நாம் முழங்கால்படியிட மறுப்பதை என்னவென்று சொல்வது? அப்படியானால் ''இயேசுவின் நாமத்தில் **முழங்கால் யாவும்** முடங்கும்!'' என்ற வசனத்தை நீங்கள் எப்படி விசுவாசித்திடக்கூடும் (பிலி.2:10).

கர்த்தருக்கு முன்பாக எளிமையுடன் தாழ்பணியும் முழங்கால்படியிடும் இப்பழக்கத்திற்கு ஆவிக்குரிய ஞான விளக்கம் தர முயற்சிக்காதிருங்கள்! மனதார நம்மை தாழ்த்தி, முழங்கால் படியிடக்கடவோம். கர்த்தரை ஆராதித்திட அழைக்கும் சங்கீதக்காரன் கூறும்போது ''நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக, நாம் பணிந்து குனிந்து **முழங்கால்படியிடக்கடவோம்** வாருங்கள்''

*என்றல்லவா அழைத்தார்! (சங்.95:6).* தேவனோ அல்லது வேதமோ மாறவில்லை. ஆதிநிலை ஆராதனையும் மாறவில்லை! ஆனால், இக்காலத்து ஆராதனை நேரத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது துயரம். இன்றைய ஆராதனை முறைகளில் 'நின்று கொண்டு' ஆராதிப்பதும் 'கைகளை உயர்த்தி' ஆராதிப்பதுமே பெரும் பங்கு வகிக்கின்றன. "தாழ்ந்து.... முழங்கால்படியிட்டு, ஜெபித்து ஆராதிக்கும் பழக்கம் மங்கிவிட்டபடியால் "பயபக்தியுடனே கர்த்தரை ஆராதித்து, நடுக்கத்துடனே கர்த்தரில் களிகூரும்" பாக்கியத்தை, பக்தியான மக்கள் இழந்து தவிக்கிறார்கள் (சங்.2:11).

இதன் பொருள், நாம் அமர்ந்து ஜெபிக்க முடியாது என்பது அல்ல. அது அவ்வப்போது நடைபெறும் செயலாய் வைத்து, முழங்காலிட்டு ஜெபிப்பதையே பிரதானமாய் கைக்கொள்வது நலம்! அப்போஸ்தலனாகிய யாக்கோபின் முழங்கால்கள் கடின தோலுடையதாய் காணப்பட்டது என சபை சரித்திரம் கூறுகிறது. அவர் **'ஜெபிக்கும் அப்போஸ்தலனாய்'** திகழ்ந்தார். ஜெபத்தைக் குறித்து அநேக குறிப்புகளை யாக்கோபு தன் நிருபத்தில் எழுதி வைத்துள்ளார். எங்கள் வாலிப நாட்களில், நாங்கள் அடிக்கடி முழங்காலிட்டு ஜெபித்தபடியால், முழங்கால் பகுதியிலுள்ள பேண்ட் தொய்வடைந்து நூல் பிரிந்து இருக்கும்..... இன்றோ, உட்கார்ந்திருந்த பின்பகுதி தொய்வடைந்து நூல் பிரிந்து காணப்படுகிறது! முழங்காலிட்டு ஜெபிப்பதில் 'கண்ணுறக்கம்' சம்பவிப்பதில்லை! நமது இஸ்லாமிய நண்பர்கள், உயர பறக்கும் விமானத்தில் கூட முழங்காலிட்டு தொழுது கொள்ளத் தயங்குவதில்லை. இழந்து போன இந்த இனிய பழக்கத்தை, இனிமுதல் கடைப்பிடித்து, தேவனை ஜெபத்தில் தரிசிப்போமாக!

- R.ஸ்டான்லி BYM

---

## தேவன் நமக்குத் தந்தவர்களை 'ஆதாயம்' செய்திடக்கடவோம்!

ஆண்டவர் இயேசு, பேதுருவிடம் "**நான் உன் கால்களைக் கழுவாவிட்டால், என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை!**" என கூறியதைக் கேட்டு, தன் கால்களைக் கழுவ வேண்டி நின்றான் (யோவான்13:8,9). மேலும், "நான் உங்களுக்குச் செய்ததுபோல, நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியை காண்பித்தேன்" எனவும் தொடர்ந்து 15-ம் வசனத்தில் இயேசு கூறினார்.

"**ஓர் நித்திய சுதந்திரத்தை**" இந்த வசனங்களுக்குப் பின்னால் இயேசு மறைத்து வைத்துள்ளார். யோவான்13:1 அதிகாரத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல், இந்த உலகத்திலிருந்து மீட்கப்பட்ட

“தனக்குச் சொந்தமானவர்களை, முடிவுவரை அன்புகூர்ந்து **ஆதாயப்படுத்திக்கொள்ளவே**” அவர்களின் ‘அன்றாட’ குறைகளை மனதார மன்னித்து, கழுவினார்!

“பிதாவே, **நீர் எனக்குத் தந்தவர்கள்,** உம்முடையவர்களாயிருக்கிறார்கள்” என இயேசு யோவான் 17:9-ல் கூறினார்.

**நமக்குச் சொந்தமாய் தரப்பட்ட மனைவி, பிள்ளைகள் தொடங்கி.... ஜீவனுள்ள சபையின் சகோதர சகோதரிகள் வரை, அவர்கள் அனைவரையும் நாமும் ‘ஒருவரையொருவர், அவர்களின் தூசிகளைக் (குறைகளைக்) கழுவி அல்லது மன்னித்து’ அவர்களும் நித்திய குடும்பத்தில் பங்கடைய அவர்களை ஆதாயம் செய்ய வேண்டும்!**

அவரது சபையில் தேவன் தந்த சகோதரனை அல்லது வீட்டில் அவர் தந்த மனைவியை முதலில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தம் அவர்களிடம் அன்புவைத்ததற்குரிய இரகசியம்.... அவர்களின் ‘தூசியான’ தவறுகள் அனைத்தையும் உடனுக்குடன் மன்னித்து, கழுவியதேயாகும்! அப்படிச் செய்யவில்லையென்றால், இந்த உலகில் வந்த ஒருவராகிலும், **‘முடிவுபரியந்தம் ஒருவரை அன்புகூர்ந்திட’** ஒருக்காலும் இயலாது! ஒரு சகோதரனின் அல்லது தன் மனைவியின் ‘பெலவீனத்தை’ (தவற்றை) உடனே நான் அவர்கள் கால்களின் தூசியைக் கழுவாவிட்டால், இயேசு கூறியதைப்போல் “என்னிடத்தில் உனக்கு பங்கில்லை!” என்ற வீழ்ச்சி ஏற்பட்டுவிடும்!

“என்னோடுகூட என் மனைவியும் (சகோதரனும்) நித்திய ஜீவனாகிய கிருபைக்கு சுதந்திரம் கொண்டவர்கள்” (1பேதுரு 3:7) என அறிந்தவர்கள் மாத்திரமே, ஒருவரையொருவர் மன்னித்து, அவர்களை ஆதாயம் செய்வார்கள்!

என் பாவம் எனக்கு மன்னிக்கப்படாமல் போய்விடக்கூடாது! என அஞ்சி, பிறரை மன்னிப்பது ஆரம்ப நிலை கிறிஸ்தவம். ஆனால், என் மனைவியை நான் மன்னிக்காவிட்டால், அவள் என்னோடு **நித்தியத்தில் பங்கடைய** முடியாமல் போய்விடுமே? என் சகோதரனை நான் மன்னிக்காவிட்டால், அவன் என்னோடு **நித்தியத்தில் பங்கடைய** முடியாமல் போய்விடுமே? என்ற ஆதங்கமே, இயேசு நம்மில் எதிர்நோக்கும் ‘பரம குடும்பத்தின்’ ஆதங்கம்! பரலோக குடும்பத்தின், ஞானவான்களுக்குரிய இந்த ‘ஆத்தும ஆதாயம்’ நம் யாவருக்கும் சொந்தமாகக்கடவது! (நீதி.11:30). ஆமென்.

- T.ரத்தினகுமார்

பாவ வாலிபர்களுக்கு நல்வழி போதித்த

# ஜான் போஸ்கோ!



இத்தாலி நாட்டின் ஒரு குக்கிராமத்தில் பிறந்தவர் ஜான் போஸ்கோ. நெப்போலியன் யுத்தத்தில், இத்தாலி எங்கும் பஞ்சம் தாண்டவமாடிய காலமாயிருந்தது. தன்னுடைய 9-வது வயதில் அவர் கண்ட கனவு, அவர் வாழ்க்கையின் பிரதான இலட்சியமாய் மாறியது: "திரளான ஏழை பையன்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு, கடவுளை கெட்ட வார்த்தையால் தூஷித்துக்கொண்டிருந்தபோது, அமைதியான ரூபத்தில் ஒருவர் தோன்றி ஜான் போஸ்கோவை பார்த்து "இந்த பையன்களை அடித்து திருத்தாமல், உன் அன்பினாலும் மென்மையான சுபாவத்தாலும் திருத்தக்கடவாய். அதன்மூலம் பாவம் கொடிதென்றும் தெய்வ குணம் அருமையான அழகுள்ளதென்றும் அவர்களுக்கு உணர்த்து" என கூறிவிட்டு மறைந்து சென்றார். அதுமுதல், தீதான இளைஞர்களுக்கு மறுவாழ்வு தந்து அவர்களை கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்துவதே தன்னுடைய நோக்கமாய் கொண்டார்.

ஜான் போஸ்கோ, வீட்டிலுள்ள வறுமையினிமித்தம் தன்னுடைய 12-ம் வயதில் ஒரு விவசாய பண்ணையில் வேலைக்கு சேர்ந்தார். ஜோசப் கபாஸோ என்ற கத்தோலிக்க பாதிரியார் இவரிடத்தில் காணப்பட்ட ஒழுக்கத்தையும் திறமையையும் கண்டு, தன் சொந்த செலவில் படிக்க வைத்தார். அவருடைய 26-ம் வயதில் கத்தோலிக்க சபையின் பாதிரியாராக பொறுப்பேற்றுக் கொண்டார். தனக்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, தன் தரிசனத்தை முன்வைத்து, அனாதைகளாய் கைவிடப்பட்ட பையன்களுக்கு வேத வசனத்தின் நற்குணங்களை கற்றுக்கொடுத்தார். அவரே முயற்சித்து, நல்ல வேலைகளில் அவர்களை சேர்த்தார்.

தூங்க இடம் இல்லாமல் பாலத்திற்கு அடியில் படுத்துக் கிடந்த பையன்களை எழுப்பி தன்னுடைய அறையில் படுக்க வைப்பார். ஒரு சமயம் அவருடைய அறையில் தங்கிய பையன்கள், அவர் வைத்திருந்த கம்பளி போர்வைகளை திருடி சென்றுவிட்டார்கள். மற்றொரு சமயம், மேல் அறையில் வைத்திருந்த எல்லா பொருட்களையும் அள்ளிச் சென்று விட்டனர். ஆகிலும், தன் தரிசனத்தை விட்டு மனம் தளராமல், வீடு இல்லாமல் தவித்த பையன்களுக்கு ஆதரவு தந்து 1852-ம் ஆண்டு 31 - பையன்களோடு ஆரம்பித்த "பையன்கள் மறுவாழ்வு இல்லத்தில்" 1862-ம் ஆண்டு 800 பையன்கள் கொண்ட மறுவாழ்வு இல்லமாய் தோன்றியது.

தான் பெற்ற தரிசனத்தை நிறைவேற்றும் பணியில், ஏராளமான பொய் குற்றங்கள் சாற்றப்பட்டார். சிலர் எழுப்பிய தீய குற்றச்சாட்டால், தன்னுடைய மறுவாழ்வு பையன்கள் இல்லத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியதாகி விட்டது. சிறந்த பண்பில் வளர்ந்த பையன்களை பாதிரியார் பயிற்சிக்கு அனுப்பி இறை பணியில் வளரச் செய்தார். இவருக்கு "பிள்ளைப் பிடிப்பவர்" என்ற கெட்டபெயரும் உண்டாகி அதை கிறிஸ்துவுக்குள் சகித்துக்கொண்டார். 1888-ம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்த ஜான் போஸ்கோவின் இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரமான ஜனங்கள் கூடி தங்கள் இறுதி மரியாதையை செலுத்தினார்கள். பையன்களுக்கும் வாலிபர்களுக்கும் கிறிஸ்துவின் அடைக்கல பேழையாய் இருந்த அவரை "இளைஞர்களின் தந்தையும், போதகருமாயிருந்தவர்" என அன்புடன் அழைக்கப்பட்டார்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## தெய்வ ஞானத்தின் அதிசயம் கண்டு, சிருஷ்டிகரிடம் திரும்புங்கள்!

ஒரு பெரிய ஆலமரத்தை நான் பார்த்துக்கொண்டிருந்தேன்! பிரமாண்டமான அந்த மரம் தனது விசாலமான கிளைகளை நான்கு திசைகளிலும் பரப்பியிருந்தது. அந்த மரத்தின் பெரிய கிளைகள் முறிந்து விழுந்துவிடாமல் இருக்க, கிளைகளிலிருந்து விழுதுகள் கீழே நோக்கி இறங்கி வந்து மண்தரையில் தொங்கிக்கொண்டிருந்தன. தொங்கிக் கொண்டிருந்த விழுதுகள் சில இடங்களில் பூமியை வந்து தொட்டு, மரகிளைகளுக்கு ஊன்று கோல்களாக நின்று கொண்டிருந்தன. தொங்கிக்கொண்டிருந்த இளம் விழுதுகளில் சிறுவர்களும் வாலிப பிள்ளைகளும் ஊஞ்சல் கட்டி ஆடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். ஆலமரத்தின பழம் பழுக்கும் காலமானதால் கிளிகள், மைனாக்கள், குயில்கள் போன்ற பறவைகள் ஆனந்தக் குரல்கள் எழுப்பிக்கொண்டே பழங்களை கொத்தித் தின்று கொண்டிருந்தன. அந்த ஆனந்தமான குரல்களைக் கேட்டு மனம் மகிழ்ந்த நிலையில், அந்த மரத்தின் நிழலில் அப்படியே கண்ணயர்ந்து நித்திரை செய்வோரையும், ஆங்காங்கு சிறு சிறு கூட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் மக்களையும் நான் கண்டேன். ஆலின் சிறு பழத்தின் 'ஒரு விதை' மன்னனுக்கும், அவனது பரிவாரங்களுக்கும் நிழல் கொடுக்கும் விதத்தில் பிரமாண்டமாக வளர்ந்து படர்ந்து கிடந்தன. அத்தனை சிறிய விதை, கடினமான கருங்கல் பாறையில் விழுமானால், அந்தப் பாறையை அது உடைத்துக் கொண்டு, தனது வேர்களை ஊன்றும்! பனை, வேம்பு போன்ற மரங்களில் விழுமானால் அந்த மரங்களை அப்படியே அது ஊடுருவிப் பிளந்து கொண்டு சென்று, தனது ஆதிக்கத்தை மட்டும் நிலைநிறுத்தி விடும். ஆ, தேவனுடைய ஞானத்தை என்னவென்று சொல்லுவது! ஒரு சிறிய அற்பமான வித்துக்குள் எத்தனை வலிமையை தேவன் வைத்து படைத்துள்ளார்.

எந்த ஒரு ஜீவராசியையும் முழுமையாக ஆராய்ந்து, இதுதான் இதன் சரித்திரம் என்று முற்றுப்புள்ளி கொடுக்க நாசியில் சுவாசமுள்ள மனிதனால் இயலாது. அதற்குரிய முழுமை ஞானம் அதின் சிருஷ்டிகரின் கரத்தில் மட்டுமே உள்ளது. மூன்று மைல்களுக்கு அப்பாலிருந்து தேனை சேகரித்து வந்து, தனது தேன்கூண்டில் சேர்க்கும் தேன் ஈயைக் குறித்துகூட மண்ணான மனிதனால் முழுமையாக ஆராய்ச்சி செய்து, இதுதான் தேனீயின் முழுமையான வாழ்க்கை வரலாறு என்று முடிவு செய்து எழுத அவனால் கூடாது. ஓ மனிதனே, இத்தனை மகத்துவ தெய்வ ஞானத்தை நாம் புறக்கணிப்பது சரிதானா? கர்த்தருக்கு பயப்படுகிற பயமே தெய்வ ஞானத்தின் ஆரம்பம் என்பதை அறிந்து, தேவனிடத்தில் மனந்திரும்பி ஓர் புதுவாழ்கை துவங்கி வாழுங்கள்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**